பக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

கடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 06 செவ்வாய்க்கிழமை (22-10-1996) UTHAYAN A Liveyl Nationel Tamil Daily கதிர் 248

# 9 படையினர் பலி!

# 2 படகுகள் அழிப்பு!!

## சுண்டிக்குளத்தில் தாக்குதல்

கொழும்பு, ஒக். 22

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் கடற்படையினரின் படகுகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 9 கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் 44 படையினர் காயமடைந்ததாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

கடற்படைக் கப்பல்களை தாக்குவதற்கு புலிகள் றொக்கட் மூலம் செலுத்தும் கைக் குண்டுகளைப் பாவித்தனர் என்றும் —

இத்தாக்குதலின்போது கடற்படையினரின் இரு படகுகள் அழிக்கப்பட்டன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த 44 பேரில் 9 பேர் கடற்படையினர் என்றும் —

35 பேர் இராணுவத்தினர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதே சமயம் கடற்படையினர் மீதான தாக்குதலின் போது கடற்படையினருக்கு உதவிக்கு வந்த ''எம்-24'' ரக ஹெலிக் கொப்டர்கள் மீதும் புலிகள் தானியங்கித் துப்பாக்கிகள் மூலம் தாக்கினர் என்றும் —

ஆனால் ஹெலிக் கொப்டர்களுக்குச் சேதம் ஏற்படவில்லை என்றும் — வெரித்தாஸ் சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாவுக்கு எதிராக மற்றொரு வழக்கு

## விரைவில் தாக்கலாகும்

கொழும்பு, ஒக். 22

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது மற்றும் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது.

இது தொடர்பான நடவடிக்கையில் சட்டமா அதிபர் திணைக்களம் ஈடுபட்டிருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றுத் தெரிவித்தது.

கடந்த ஜூலை மாதம் தெகிவளை ரயில் நிலையத்தில் ரயிலில் குண்டு வெடித்தது தொடர்பாகவே பிரபாகரன் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

இந்த வருடம் ஜனவரி மாதம் நிகழ்ந்த மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு தொடர்பாக ஏற்கனவே இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

தெகிவளை குண்டு வெடிப்பில் உயிர் தப்பிய பயணிகள் மூன்று விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மகஸீன், களுத்துறைச் சிறைகளில்

# யாழ். இளைஞர் உண்ணாவிரதம்!

## தடுத்துவைக்கப்பட்டதை ஆட்சேபித்து

கொழும்பு, ஒக்ரோபர் 22

கொழும்பு புதிய மகஸீன், களுத்துறைச் சிறைச்சாலைகளில் உள்ள யாழ்ப்பாண இளைஞர்கள் 76 பேர் நேற்று முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

தம்மை ஜனவரி பத்தாம் திகதி வரை தடுத்து வைக்குமாறு விதிக்கப்பட்ட உத்தரவை ஆட்சேபித்தே இவர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கின்றனர்.

குறிப்பிட்ட உத்தரவு ரத்துச் செய்யப்படும் வரை தாம் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக இந்த இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது பாதுகாப்புப் படையினரால் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட இவர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் பொலீஸார் அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# குஜ்ராலின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு!

## சுகவீனம் என அறிவிப்பு

இந்திய வெளியுறவு அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலின் இலங்கை விஜயம் அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குஜ்ரால் 4 நாள் விஜயமாக நாளை மறுதினம் இலங்கை வருவதாக இருந்தது. அவரது சுற்றுப் பயணம் குறித்த புதிய திகதிகள் விரைவில் முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகவீனமுற்ற குஜ்ரால் நேற்று டில்லியில் உள்ள அகில இந்திய வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# கடற் புலிகளின் தளம் மீது

# படையினர் நேற்று தாக்கு!

கொழும்பு, ஒக். 22

சுண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரு கடற்படைப் படகுகள் அழிக்கப்பட்டு 9 கடற்படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து—

நேற்றுக் காலை வெற்றிலைக்கேணிக்கு தென் பகுதியில் உள்ள கடற் புலிகளின் தளம் ஒன்றை பாதுகாப்புப் படையினர் நிர்மூலமாக்கினர் என்று — பாதுகாப்பு அமைச்சு தலைமையகம் தெரிவித்தது.

ஆகாய மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் படையினர் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கைகளின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகள் சென்ற படகுமீது துப்பாக்கிப் பிரயோகம்

## பெண் ஒருவர் பலியானார்

புங்குடுதீவு தெற்கு கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருபெண் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை சில்லாலைக் குறிச்சியைச் சேர்ந்த உருத்திராபதி பூரண ரத்தினம் (வயது 58) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நேற்றுக் காலை நடந்த தாக்குதலில் மட்டக்களப்பில் 6 படையினர் பலி

கொழும்பு, ஒக். 22

நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாவடி வேம்பில் இடம்பெற்ற சண்டையில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர். இருவர் காயம் அடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சு இதனைத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் குறித்து மேலதிக விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

[illegible] தாக்குதலை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றுவிட்டனர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கிரனேட் வீச்சை அடுத்து நவிண்டிலில் துப்பாக்கிச் சூடு

வடமராட்சி நவிண்டில் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தையடுத்து மூன்று பெண்கள் சூட்டுக் காயங்களுடன் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின் போது சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்த அமிர்தலிங்கம் தங்கம்மா (வயது 65) அவரது மகள் வசீதா (வயது 2) வீதியால் சென்று கொண்டிருந்த பாலசிங்கம் செல்லம்மா (வயது 55) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வுத்திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்படும்

கொழும்பு, ஒக். 22

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு யோசனைகளை மாவட்டரீதியாக நாடளாவிய முறையில் மக்களுக்கு விளக்கிக் கூறும் திட்டம் ஒன்றை நீதி, அரசமைப்பு விவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

இது தொடர்பான சுவரொட்டிகளும் ஒட்டப்படும். (இ-3)

---

உ

வேலணை பெருங்குளம்

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

ஜீர்ணோத்தாரண அஸ்டபந்தன

## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பாளின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் 23—10—1996 அதிகாலை தொடங்கி 24—10—1996 8-30 முதல் 9-30 வரையுள்ள சுபவேளையில் பாலஸ்தாபனம் நடைபெறும்.

ஐப்பசித் திங்கள் 12 ஆம் நாள் 28—10—1996 திங்கட் கிழமை அதிகாலை 10 மணிமுதல் கர்மாரம்பமாகி ஐப்பசித் திங்கள் 14 ஆம் நாள் 30—10—1996 புதன்கிழமை பிற்பகல் விப்பஸ்தாபனம், தைலாப்பியங்கம் (எண்ணெய் சார்த்துதல்) ஆரம்பம் 31—10—1996 வியாழன் பிற்பகல் 3-00 மணி வரை நடைபெறும்.

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாது வருஷம் ஐப்பசித் திங்கள் 16 ஆம் நாள் (01—11—1996) வெள்ளிக் கிழமை புனர்பூச நட்சத்திரமும் பூர்வஷஷ்டிதிதியும் கூடிய காலை 9-22 மணி முதல் 10-28 மணி வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் நிகழும்.

அவ்வமயம் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வந்து அம்பாளின் அருள் ஆசியைப் பெற்று உய்வீர்களாக.

(43294) அம்பிகை அடியார்கள்.

---

## ஆஸ்பத்திரியில் நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

1987 ஆம் ஆண்டு யாழ். ஆஸ்பத்திரிக்குள் வைத்து இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட டாக்டர்கள், தாதியர் மற்றும் ஊழியர்கள் உட்பட 21 பேரினதும் நினைவு நாள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுஷ்டிக்கப்பட்டது.

21 பேரினதும் திருவுருவப் படங்களுக்கு 21 ஈகச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் முதல் ஈகச்சுடரை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் உறவினர்களினால் மிகுதி ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

அஞ்சலி நிகழ்வினைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வளவில உள்ள இந்து ஆலயத்திலும் கிறிஸ்தவ தேவாலயத்திலும் விசேட பூசைகளும், ஆராதனைகளும் நடைபெற்றன. (இ-15)

---

## நீ மறைந்து ஓராண்டு
### உன் நினைவில் நாமிங்கு



அமரத்துவமடைந்த

## செல்வி சிலோசனா சின்னராசா

அன்று விளைந்தது: 20—03—1972 | இன்று கலைந்தது: 22—10—1995

நொடிப்பொழுதில் காலனுனைப் பறித்தான்
நாங்களுனை மறப்பமென நினைத்தான்
எப்படி நாம் மறந்திடுவோம் முடியவில்லையே!
எம்விழிகள் நனைந்திடாது இருப்பதில்லையே!
உடன்பிறவாத் தங்கையே சிலோ!
உன்னகத்தின் நேர்மையோடு உனது அன்பும் திறனும்
ஏம்மனத்தில் வேரிட்டதாற் கதைத்திடுவம் நாளும்.

தொழில் அதிபர் + ஊழியர்கள்,
'பிறியா காமென்ஸ்'.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [8930]

---

## கோப்பாய் தெற்கில் மிதி வெடி

யாழ்ப்பாணம், ஒக். 22

கோப்பாய் தெற்கு, நாவலடிப் பகுதியில், நேற்று முன்தினம் மிதிவெடியில் சிக்குண்ட ஒருவர் வலதுகால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

கணபதிப்பிள்ளை குணசீலன் (வயது49) என்பவரே கால்துண்டிக்கப்பட்டு காயம் அடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கூட்டுறவு தேநீர்க் கடை

சாவகச்சேரி, ஒக். 22

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொதுமக்களின் நன்மை கருதி தேநீர்க் கடை ஒன்றைத் திறந்துள்ளது. (இ.3)

## அமெரிக்கா மருத்துவ உதவி

கொழும்பு, ஒக் 22

ஐக்கிய அமெரிக்காவின் மருத்துவ நிவாரண நிறுவனம் ஒன்று 5 இலட்சம் டொலர் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (3)

## கோழிக்குஞ்சு விநியோகம்

வலி தென் மேற்கு, ஒக். 22

உடுவில்- சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி ஒரு தொகுதி கோழிக்குஞ்சுகள் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

இப் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு- புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இலவசமாக கோழிக்குஞ்சுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. (இ- 145)

---

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்ததிருமதி தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை 21-10-96 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ராமகிருஸ்ணன் (மலேசியா), ராமேஸ்பரன் (கொழும்பு), காலஞ்சென்ற ராமையா (வேந்தன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிர்மலாதேவியின் அன்பு மாமியாரும், சிவராமன், சிவநேசன், சிவவேந்துஜாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 22-10-96 இல் மு.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி வேந்தன்

சுளிபுரம் மேற்கு,
சுளிபுரம். (43295)

---

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## உருத்திராபதி பூரணரத்தினம்
(தங்கக்கிளி)

திருமதி உருத்திராபதி பூரணரத்தினம் ஞாயிறு 20-10-1996 காலை அகால மரணமானார். அன்னார் உருத்திராபதியின் (இளைப்பாறிய பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்) மனைவியும், குகலட்சுமி, ரூபலட்சுமி, சேகர், சுதாகர், சிறீதர், உதயலட்சுமி, யசோதர், கஜலட்சுமி ஆகியோரின் தாயாரும், றஞ்சிற் கனகநாயகம், பவேந்திரன், ஜெயதரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை 22-10-1996 காலை 10.00 மணி அளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உருத்திராபதி
(கணவன்)

வல்வெட்டித்துறை. (43181)

---

## மார்க்கண்டு அன்னம்மா
(களபூமி காரைநகர்)

காரைநகர் விளானைச் சேர்ந்த மார்க்கண்டு அன்னம்மா 19-10-96 இல் காலமாகிவிட்டார்.

இவர் காரைநகர் விளானைச் சேர்ந்த கா. கந்தையா - பொன்னம்மாவின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் மனைவியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் (மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை), தவநாயகி (அதிபர் ஆ. தி. ம. மகா வித்தியாலயம்) நாகம்மா ஆகியோரின் மாமியாரும், இளைப்பாறிய ஆசிரியை சு. சேதுப்பிள்ளையின் சகோதரியும், இளைப்பாறிய ஆசிரியர் பொ. சுப்பிரமணியத்தின் மைத்துனியும், சிறீதரன், மனோகரன், ஜனகன் ஆகியோரின் பேர்த்தியும், இராமநாதர், தனுஷ்கோடி, சிதம்பரம், பேரம்பலம், வள்ளியம்மை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னக்குட்டி, வள்ளியம்மையின் பெறாமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-10-96 இல் கோணாவிலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகதல்:
மா. பாலசிங்கம்
(மகன்)

களபூமி
காரைநகர். (8931)

---

## முத்தையா சிவராசா
(புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம், கந்தரோடை)

கந்தரோடை மேற்கைச் சேர்ந்த முத்தையா சிவராசா அவர்கள் 21-10-1996 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா — தங்கம்மா தம்பதிகளின் புத்திரனும் திருமதி பூமலரின் அன்புக் கணவரும், சுமதி(சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன், சுகந்தி (சுவிஸ்). சுதாதினி (சுவிஸ்), சுகர்னா, சுதர்ஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீபதி (சுவிஸ்), வில்வராஜா (சுவிஸ்), கிருஸ்ணமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் கஜந்தன் (சுவிஸ்), சைனஜா (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கந்தரோடையில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பூமலர்
(மனைவி)

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம். (43293)

---

## கந்தையா தனபாலசிங்கம், தனபாலசிங்கம் சுதாகரன்.

தம்பிராய் பூநகரியைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம், தனபாலசிங்கம் சுதாகரன் ஆகிய இருவரும் 16-10-1996 அன்று அகால மரணமானார்கள். இவர்கள் காலஞ்சென்ற கந்தையா - பசுபதி தம்பதிகளினது மகனும் பேரனும்; ஆனந்தீஸ்வரியின் (ப. நோ. கூ. சங்கம், பூநகரி) அன்புக்கணவரும் அன்பு மகனும்; துஸ்யந்தன், நிரோசன், லக்ஷன், கௌதமன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சகோதரனும்; வாமதேவனின் (கிராம உத்தியோகத்தர், மட்டுவில் மத்தி) சகோதரனும் பெறாமகனும் ஆவர். இவர்களின் இறுதிக் கிரியைகள் 17-10-1996 அன்று தம்பிராய் பூநகரியில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. வாமதேவன் (G. S)
சகோதரனும்
பெரியதந்தையும்

மட்டுவில் தெற்கு,
மருதங்குள வீதி,
சாவகச்சேரி. (43296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு தாக்குதலுக்கு முன் புலிகள் மேற்கொண்ட தயாரிப்புகள்

முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி தெற்காசிய இராணுவ வரலாற்றில் குறிப்பிடத்தக்க பெரும் இராணுவத் தோல்வி என இத்தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

அதன் பின்னணியில் மிளிர்வது விடுதலைப் புலிகளின் தலைமை அமைப்பின் திறமைதான் என்றால் அது மிகையாகாது.

யாழ். குடாநாட்டின் கட்டுப்பாட்டை இழந்தமை புலிகளைப் பொறுத்தவரை பெரிய இராணுவத் தோல்வி. அதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் மணலாறில் புலிகளின் தாக்குதல்கள் அணிக்குக் கிடைத்த படு தோல்வியுடன் புலிகளின் சரிவு காலம் ஆரம்பமாகிவிட்டது என்று பலரும் கணிப்புக் கூறத் தவறவில்லை. ஆனால் தமது கணிப்பு தவறாக இருக்கலாம் என்ற பாடத்தை அவர்களுக்கு உணர்த்தியது முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி.

### விடுதலைப் புலிகளின் மனச்சோர்வு

முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு முன்னர் கிடைத்த அடுத்தடுத்த தோல்விகளால் — அல்லது அரசபடைகளின் முன்னேற்ற நகர்வுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கியதால் ஏற்பட்ட தலைகுனிவால் — புலிகளின் அணிகள் மத்தியில் மனச் சோர்வு ஏற்பட்டிருந்தது. ஆனால் அது போராட்டத்தைக் கைவிட்டு ஓடும் சோர்வல்ல ''வெல்ல முடியாவிட்டாலும் அடிபட்டுச் சாவோம்'' என்ற மன ஓர்மம் தான் புலிகளின் மத்தியில் ஓங்கி நின்றது. வெற்றி மீது நம்பிக்கை இருக்கவில்லையே தவிர, யுத்தத்தில் உக்கிரமாக ஈடுபட வேண்டும் என்ற ஆவேசம் — உக்கிரம் — புலிகள் மத்தியில் உயர்ந்து நின்றது. இந்த மன எழுச்சியை புலிகளின் தலைமைப் பீடம் தனக்கு சாதகமாகத் திறம்படப் பயன்படுத்தி, முல்லையில் அரச படைகளை மண்டியிட வைத்துவிட்டது.

### உளவுத் தகவல்கள்

யாழ்ப்பாணத்தை அரச படைகள் கைப்பற்றியதை அடுத்து அவற்றின் நகர்வு வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கியதாகத்தான் இருக்கும் என்பது விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனுக்குத் தெட்டத் தெளிவாகப் புரிந்திருந்தது.

யாழ். குடாநாட்டில் தமது ஆட்பலத்தை அதிகரித்துவிட்டு அங்குள்ள முக்கிய தாக்குதல் பிரிவுகளை வன்னிக்கு நகர்ந்த படைத்தரப்பு திட்டமிடுவது பற்றிய உளவுத் தகவல்களும் அவருக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன.

அதைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்பதில் புலிகளின் தலைவர் தீவிரமாக இருந்தார்.

கிழக்கில் பெரிய தாக்குதல் ஒன்றை நடத்தி படையினரின் முழுக்கவனத்தையும்கிழக்கின் பக்கம் திரும்பலாம் என்று பிரபாகரனின் முக்கிய தளபதிகள் அவருக்கு ஆலோசனை கூறினராம். ஆனால் அவர் அதனை ஏற்கவில்லை.

அதற்குப் பதிலாக கிழக்கில் தமது முக்கிய தளபதிகளை இறக்கி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த அவர் திட்டமிட்டார்

### கிழக்கில் தாக்குதல் நடத்துவதுபோல் பாசாங்கு

அதன்படி தமது முக்கிய தளபதிகளை ஒரு சிறு தொகை வீரர்களுடன் கிழக்குக்கு அனுப்பி, அந்தத் தளபதிகள் கிழக்கில் நிலைகொண்டிருப்பது குறித்தும், அங்கு பெரும் தாக்குதல் நடவடிக்கைக்கு அவர்கள் தயாராகி வருவது குறித்தும் செய்திகளை வெளியே கசிய விட்டார்.

## பகுதி - 3

இதன் மூலம் கிழக்கில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைப் படைகளை தொடர்ந்து பேணிக் கொண்டு, அங்கு எந்நேரமும் ஒரு பெருந்தாக்குதலை எதிர்பார்த்து 'டென்ஷனுடன்' இருக்கும் நிலையை அரசுத் தரப்புக்கு அவர் ஏற்படுத்தினார்.

அதே சமயம் புலிகளின் தாக்குதல் இலக்கு கிழக்கின் பக்கம் திரும்பியிருப்பதாக அரசுத்தரப்புக்கு ''பாவ்லா'' காட்டிக் கொண்டு வன்னியில் ஒரு பெரும் பாரிய தாக்குதலுக்குத் தயாரானர்.

முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு சிலநாள்கள் முன்னர் வரை திருகோணமலையில் இருந்து கொண்டு அங்கு பெரும் தாக்குதலுக்கு தயாராவது போல காட்டிக்கொண்டிருந்த புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான சொர்ணமும் அவரின் படைப் பிரிவும் கூட முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு சற்று முன்னர் — இறுதி நேரத்தில் தான் வன்னிக்கு இரகசியமாக அழைத்துவரப்பட்டனர்.

## தொகுப்பு: கவி

### ஏற்பாடுகளைப் பிரபா நேரில் கவனித்தார்

மணலாறு முகாம் மீது கடந்த ஆண்டு ஜூலையில் நடத்தப்பட்ட பெரும் எடுப்பிலான தாக்குதல் நடவடிக்கை பற்றிய தகவல், முன்னரே அரசுப் படைகளுக்கு நேரத்துடன் கிடைத்து விட்டதால் அத்தாக்குதல் நடவடிக்கையில் தனக்குக் கிடைத்த பெரும் தோல்வி என்ற பாடத்தினால் இம்முறை சகல தாக்குதல் முன்னேற்பாடுகளையும் பிரபாகரன் தமது நேரடிக் கவனிப்பிலேயே வைத்துக் கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

புலிகளின் துணைத்தளபதி பால்ராஜ் தலைமையில் தான் தாக்குதல் நடத்தப்பட்டது. சொர்ணம், [illegible] களின் தளபதி [illegible] றோரின் தலைமையில் சிறப்புப் படையணிகள் தாக்குதலுக்கு உதவின. கரும்புலிகளின் அணிதான் ஊடுருவும் முதல் அணியாகப் பாய்ந்ததாம்.

### அழித்தொழிப்பு யுத்தம்

முல்லைத்தீவு முகாம் மீதான போரை வெறும் தாக்குதல் யுத்தமாக பிரபாகரன் திட்டமிடவில்லை. பதிலாக அதனை ஓர் அழித்தொழிப்பு யுத்தமாகவே அவர் திட்டமிட்டார்.

ஒரு முகாமை அல்லது ஒரு படையணியைத் தாக்கும் போது அந்த முகாமுக்கு அல்லது படை அணிக்கு ஏனைய முகாம்களிலிருந்து அல்லது நிலைகளிலிருந்து வரும் உதவிகளைத் தடுக்கச் செய்வதற்காக முன்னேற்பாடாகச் செய்யும் நடவடிக்கைகளை ''கட் - அவுட்'' என்று பொதுவாகக் குறிப்பிடுவது உண்டு.

முல்லைத்தீவு முகாமுக்கு தரைப் பாதை வழியாகவோ அல்லது கடற்பாதை வழியாகவோ வரக்கூடிய உதவிகளைத் தடுப்பதற்கு உரிய 'கட் அவுட்' ஏற்பாடுகளைப் போட்டு விட்டுத் தான் முகாமின் மீது கைவைத்தார்கள் புலிகள்.

ஆகாய வழியாக வரக்கூடிய உதவிகளை அல்லது வந்திறங்கக் கூடிய மீட்பு அணிகளை முறியடிப்பதற்கான திட்டம் குறித்தும் புலிகள் சிரத்தை எடுத்ததாகக் கூறப்படுகின்றது.

### ஆயத்த களம் இடம் மாறியது

இதேசமயம் ஜூலை மாத நடுப்பகுதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்காத் துருப்புகள் ஆரம்பிக்கக் கூடும் என புலிகள் எதிர்பார்த்தனர். அதனால் கிளிநொச்சிப் பகுதியில் தற்பாதுகாப்புக்குத் தேவையான ஒரு சில அணிகளை மட்டும் விட்டு விட்டு, முல்லைத் தீவுத் தாக்குதலுக்கான தனது ஆயத்தக் களத்தை கிளிநொச்சியின் தெற்கேயும், தென்கிழக்கேயும் உள்ள வேறு காட்டுப் பகுதிக்கு மாற்றி விட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்து கொண்ட புலிகளின் தலைவர், தாக்குதலுக்கு முன்னர் அரசுப்படைகளின் கவனத்தைத் திசை திருப்ப [illegible] வேறு [illegible] நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறவில்லை.

### மாயைத் தோற்றம்

ஜூன் மாத இறுதியிலும், ஜூலைமாத முற்பகுதியிலும் ஆனையிறவுக்கு அப்பாலும் பூநகரிப் பகுதியிலும் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகளைக் குவித்திருப்பது போன்ற மாயைந் தோற்றத்தை அவர் ஏற்படுத்தினார். தேவையில்லாமல் பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் அப்பகுதியில் ஆரவாரத்துடன் நடமாடினர்; வாகனங்கள் அப்பகுதியில் பெரும் ஏற்பாடு ஒன்றுக்குத் தயாராவது போல ஓடித்திரிந்தன. தமது பாதுகாப்பு முன்னணிக் காவலரண்களில் நிலைகொண்டிருந்த படைகளுக்குப் புலனாகக் கூடிய வகையில் பல நூற்றுக்கணக்கில் சவப்பெட்டிகள் அப்பிரதேசத்துக்குக் கொண்டு வரப்பட்டு, இறக்கி வைக்கப்பட்டு அங்கும் இங்கும் மாற்றி அடுக்கி வைக்கப்பட்டன.

★ ★ ★

### பாதுகாப்பற்ற இடத்தில் முல்லைத்தீவு முகாம்

தாக்குதலுக்கு இலக்காகி வீழ்ந்த முல்லைத்தீவு முகாம் கடற் போக்குவரத்தைப் பொறுத்தவரை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் அமைந்திருந்தது என்றாலும் கூட —

பாதுகாப்பாக — முகாம் ஒன்றைப் பேணக் கூடிய — வலிமையான இடத்தில் அது அமைந்திருக்கவில்லை. சுருக்கமாகக் குறிப்பிடுவதானால் மிக ''வீக்'' ஆன இடத்தில் அந்தத் தளம் அமைந்திருந்தது.

தளத்தின் கிழக்கு எல்லை கடல். மேற்கு எல்லை நந்திக் கடல் என்ற பரந்த களப்பு. வட எல்லை வட்டுவாகல்கிராமம். தெற்கெல்லை புதர்க் காடுகள் பரந்து காணப்படும் சிலாவத்தைப் பிரதேசம்.

புலிகளின் அதிரடித் தாக்குதல் அனைத்து முனைகளின் ஊடாகவும் ஒரே சமயத்தில் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந் நிலையில் தளத்தைச் சுற்றிய மேற்படி எந்தப் பிரதேசத்திலும் படைகள் பின்வாங்கிச் சென்று நிலைகொள்ளவோ, அங்கு ஒருங்கிணைந்து தம்மைத் தயார் படுத்தவோ, பதிலடி கொடுக்கவோ. பாதுகாப்பாக நின்ற போராடவோ இயற்கை அரண் நிலைகள் ஏதுமில்லை.

1993 நவம்பரில் பூநகரி முகாம் மீது விடுதலைப்புலிகள் ''தவளைப்பாய்ச்சல்'' பெருந்தாக்குதலைத் தொடுத்த போது முகாமிலிருந்து பின் வாங்கிச் சென்ற பெருமளவு படையினருக்கு பூநகரிப் பிரதேசத்தில் காணப்பட்ட பெரும் மணற்குன்றுகளும், பனை வடலிகளும் அவர்கள் தப்பிக்க சாதகமான சூழலைப் பெற்றுத் தந்தன.

ஆனால் அந்த வசதி ஏதுமற்ற- பொருத்தமற்ற சூழலில் அமைந்திருந்த முல்லை முகாம் மீது-

1996 ஜூலை 18 ஆம்திகதி அதிகாலை 1 30 மணிக்கு அமாவாசைக் கால இருட்டு கவ்வியிருந்த போது விடுதலைப் புலிகளின் ''ஓயாத அலைகள்'' ஓங்கி அறையத் தொடங்கின.

அதன் விவரம் நாளைய உதயனில்

(வளரும்).

## சிக்கிய படையினரின் கதி!

முல்லைத்தீவு முகாம் புலிகளிடம் வீழ்ந்த போது அங்கு எத்தனை படையினர் இருந்தார்கள்? அவர்களில் எத்தனை பேர் புலிகளிடம் உயிருடன் பிடிபட்டனர்? தப்பிச் சென்றவர் எத்தனை பேர்? உயிரிழந்தோர் எத்தனை பேர்? — இவ்வாறு எழுப்பப்படும் எண்ணிக்கைக் கணக்குகள் குறித்து கொழும்பில் இப்போது வெளியாகும் தகவல்களை கட்டுரைத் தொடரில் பின்னர் பார்ப்போம். இடையில் ஒரு தகவல். பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

முகாமைக் கைப்பற்றிய புலிகள் அதிகாரிகள், படையினர் உட்பட 207 பேரை கைது செய்து பெயர் குறிப்பிடாத ஒரு மறைவிடத்துக்குக் கூட்டிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களில் ஓர் இளம் படை அதிகாரி திடீரென ஒரு கிரனேட்டை உருட்டி விட்டு தாக்கினார். அது வெடித்ததில் யார் என அடையாளம் தெரியாத புலிகளின் தலைவர் உட்பட ஆகக் குறைந்தது ஆறு விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர்.

இதனால் கோபமும், கடும் சீற்றமும் அடைந்த புலிகள் படையினரின் முழு அணியையும் கூண்டோடு அழித்தனர்.

—இவ்வாறு மூத்தபடை அதிகாரி ஒருவர் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

## மட்டு. நகர் கடைகளை மாலை6.30க்கு மூட பணிப்பு

மட்டக்களப்பு, ஒக். 22

பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டக்களப்பு நகரில் உள்ள கடைகளை மாலை 6-30 க்கு முன்னர் மூடப்பட வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் பணித்துள்ளனர்.

இதையடுத்து கடைகள் காலை8 மணிக்கு திறந்து மாலை6.30மணியுடன் மூடப்படுகிறது.

இதுவரை காலமும் காலை 10 மணிக்கு திறக்கப்படும் கடைகள் 7 மணிவரை திறக்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஞாயிறு, போயா, வர்த்தக விடுமுறை நாள்களில் இறைச்சிக்கடை, மருந்துக்கடை, பெற்றோல் நிலையம், மதுபானக்கடை தவிர்ந்த ஏனையவை பூட்டப்பட வேண்டும் என்றும் படையினர் பணித்துள்ளர். (3)

## கண்டியில் கொள்ளை இரு பொலீஸார் கைது!

கொழும்பு, ஒக் 22

கடந்த மாதம் 2 ஆம் திகதி கண்டி கந்தையா மாணிக்கம் என்பவரது வாகனத்தை செங்கல்லையில் மறித்து அதில் இருந்த மூன்றரை இலட்சம் ரூபா பணம் மற்றும் காசோலைகளை கொள்ளையடித்தது தொடர்பாக விசாரணை நடத்தி வந்த கண்டி பொலீஸார் சந்தேகத்தின் பேரில் இரு பொலீஸாரைக் கைது செய்துள்ளனர்.

கட்டுகஸ் தோட்டை பொலீஸ் நிலையத்தில் இவ்விரு கான்ஸ்டபிள்களும் பணியாற்றி வந்தனர். (இ-3)

## பங்கீட்டுக்கு 6 லீற்றர் மண்எண்ணெய்

நவாலி, ஒக் 22

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு 6 லீற்றர் மண் எண்ணெய் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. [இ-100]

## விரிவுரைகள்

யாழ்ப்பாணம். ஒக். 22

யாழ் உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் உயர் தேசிய கணக்கியல் 2 ஆம் ஆண்டு, உயர் தேசிய வர்த்தகவியல் 2 ஆம்ஆண்டு, தேசிய வணிக டிப்புளோமா 2 ஆம் ஆண்டு, தேசிய நிதியியல் டிப்புளோமா 2 ஆம் ஆண்டு, தேசிய ஆங்கில டிப்புளோமா 2 ஆம் ஆண்டு விரிவுரைகள்—

திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள சைவவித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் தொடர்ந்து நடைபெறுமென யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு வீ எஸ். கீத பொன்கலன் தெரிவித்துள்ளார். (இ 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

கௌனி காப்பு ஆடருக்கு செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 17, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது வே. அருள் ஞானசுந்தரம் (அருள் றேடர்ஸ்), 60/17, பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம். (43283)

சாவகச்சேரி டச்சு றோட் மருதடி வீதியில் சீமெந்து கூரையிடப்பட்ட கடையுடன் கூடிய 3½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ரஞ்சனாஸ், நவீன சந்தை, சாவகச்சேரி. (சி-3320)

ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் பேசப் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, மே/பா ஜெயந்தி ஸ்ரோர்ஸ், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணார் பண்ணை சிவன் சந்தி)(43273)

தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, பீசாலை. (43209)

மணமகள் தேவை

இங்கிலாந்தில் சுயதொழில் புரியும் யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த31வயது டையவரும், நட்சத்திரம் ரோகிணி லக்கினத்தில் செவ்வாய் உள்ள மணமகனுக்கு அழகுள்ள மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். மணமகள் இங்கிலாந்தில் உள்ளவராய் இருத்தல் வேண்டும். தொடர்பு: சி. கணபதிப்பிள்ளை, இல. 312, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (43288)

### அ. அட்டை விநியோகம்

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சியில் தங்கியிருந்த காலத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் சாவகச்சேரி பிரதேச செயலர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து விண்ணப்பம் செய்தவர்களினது தேசிய அடையாள அட்டைகள் அந்தந்தப் பிரிவு பிரதேச செயலர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

உரியவர்கள் அங்கு சென்று பெற்றுக் கொள்ளுமாறும் — யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து அலைந்து திரிய வேண்டாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-100)

### கணக்கியல்

பிரத்தியேக வகுப்புகள்

திரு. நிதி

ஆரம்பம்: 26-10-96 (சனி)

A/L 98 பி.ப 3 மணி

A/L 97 பி.ப 4 மணி

பலாலி வீதி, கோண்டாவில்.

(கோண்டாவில் சந்திக்கும் டிப்போவிற்கும் இடையில்) (43286)

---

1 ஆம் ஆண்டு

## கண்ணீர்ப் பூக்கள்

பிறப்பு: 07 05 1981

இறப்பு: 22 10 1995

### கருணாநிதி நிதிவதனன் (கோபி)

மலர வேண்டிய மொட்டே!
மலராமல் போனாயோ?
புன்னகை ஓயாத உன் முகம்
எம் நெஞ்சை விட்டு நீங்காது - தம்பி!

உன் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

கதிரமலைச்சிவன் கோவிலடி,
சுன்னாகம். (43233)

---

## அனலைதீவுப் பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை

அனலைதீவில் உள்ள மூன்று பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் மாணவர்களின் கல்வி பின்தங்கியுள்ளதாக அப் பகுதி பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம், வடலூர் அ.த.க. பாடசாலை, அனலை தெற்கு அ.த.க. பாடசாலை ஆகிய இம் மூன்று பாடசாலைகளில் முன்னர் ஐம்பது ஆசிரியர்கள் கடமையாற்றி வந்தனர். தற்போது பத்து நிரந்தர ஆசிரியர்களும், பத்து தொண்டர் ஆசிரியர்களுமே கடமையாற்றுகின்றனர்.

இப்பாடசாலைகளில் முன்னூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்வதாகவும், ஜி.சி.ஈ; சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடைந்த பல மாணவர்கள் ஆசிரியர்கள் இல்லாததால் உயர்கல்வியைத் தொடர முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

### அனலைதீவுக்கு உதவி வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம் ஒக். 22

அனலைதீவு அரச ஆஸ்பத்திரிக்கு ஐந்து வருடங்களின் பின்னர் உதவி வைத்திய அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-117)

---

## 3-ம் ஆண்டுநினைவலைகள்



ஊற்றாக: 01 — 12 — 1933

காற்றாக: 25 — 10 — 1993

அமரர்

### செல்லையா அப்புத்துரை அவர்கள்

(இளைப்பாறிய உப அதிபர்,
உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்)

வானமே வெடித்தவேளை வழியினிற்
கொடுநோயுமமைக்
கானதற் கிழுத்தநாளைக் கனவிலும் மறக்கிலோமே
மானமே கொண்டநல்ல மறத்தமிழ் மற்றுமந்தக்
கூ(ன்) நிலா வுள்ளவரையிற் குலைத்திடோம்
நினைவுதன்னை.

மனைவி, மகன், மகள்.

'பிருந்தாவன்'
உடுவில் மேற்கு,
சுன்னாகம். (சி-3315)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### தம்பாபிள்ளை இராசரட்ணம்

22-09-96 இல் சிவபதமடைந்த,
எமது இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர்
திருமதி ச. அருள்நங்கை
அவர்களின் தந்தையின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

பேராதனைப் பல்கலைக்கழக
கலை இறுதியாண்டு மாணவர்கள்,
[வெளிவாரி]
புதிய உயர்கலைக் கல்லூரி.
[43275]

---

## அறிவித்தல்

அரியாலை

### பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க

எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விடுகளில் வைத்து கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்க கிளைகள் தற்போது சீராக இயங்கி வருவதனால் சகல அங்கத்தவர்களும் தாம் உற்பத்தி செய்யும் கள்ளை இவை நிலையங்களுக்கு வழங்க வேண்டும் எனவும், சட்டவிரோதமான வகையில் கள் விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறியத் தருகிறோம்.

க. சண்முகலிங்கம்
பதில் பொது முகாமையாளர்,
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்.

(43282)

---

முதலாம் ஆண்டு

## நினைவலைகள்



மலர்வு: 27 — 05 — 1947

உதிர்வு: 05 — 10 — 1995

அமரர்

### செல்லையா மகேந்திரன் (மகம்)

ஆண்டு ஒன்று சென்றாலும் எம்மை விட்டகலா
உம் நினைவலைகள்.
எம் கண்ணீர் அஞ்சலி புஸ்பங்களை
உம் காலடியில் காணிக்கையாக்குகிறோம்.

நின்பிரிவால் வாடும்:
— குடும்பத்தினர்.

சைவப் பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி. (43234)

---

ஆறாம் ஆண்டு

## நீங்கா நினைவலைகள்



மலர்வு: 1987 — 06 — 07

உதிர்வு: 1990 — 10 — 22

### செல்வன் சத்தியநாதன் அட்சயன்

ஆண்டு ஆறு ஆனபோதும் அப்பா, அம்மா. என அழைத்த மழலைமொழி இன்னும் காதில் ஒலிக்கின்றது. மலர்ந்த உன் வதனம் இன்றும் எம் நினைவில் நிற்கின்றது.

உன் நினைவாகவே வாழும்;
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி.

கைதடி தெற்கு,
கைதடி. (43167)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## தார்மீகக் கடமை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு இந்தியா உதவமாட்டாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் இந்திர குமார் குஜ்ரால் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வந்த ஒரு வாரத்திற்குள் —

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு எங்களுக்குத் தேவை இல்லை. அப்படி இந்தியா தலையிடவும்மாட்டாது. இதனை இந்தியா எமக்கு மீண்டும் மீண்டும் உறுதி செய்துள்ளது — என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தமிழர்களின் தூதுவராகச் சென்று, மத்திய அரசுடன் பேச்சுநடத்தி, இவ்விடயத்தில் இந்தியா தலையிட்டுத் தீர்வு காணுமாறு வற்புறுத்தவேண்டும்.—

சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்னாள் எம். பி. இரா. அன்பரசு முதலமைச்சரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது தெளிவில்லாத ஒரு மயக்கமான, குழப்பமான கலங்கிப்போன தன்மையையே இவற்றில் இருந்து காணமுடிகிறது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிட்டதும் தனது கௌரவத்தை இழந்து இங்கிருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டதும் ஒன்பது வருடங்களுக்கு முந்திய அதன் கசப்பான அனுபவம். இந்தியப் படைகள் இங்கு நிலை கொண்டிருந்த போது தனது 1,200 ஜவான்களை இழந்ததும் காலத்தின் பதிவு.

1987 ஆம் ஆண்டில் இரண்டு நாடுகளிலும் இருந்த ஆட்சித் தலைமைத்துவங்கள் இப்போது மாறிவிட்டன. அத்தோடு அரசியல் பின்புலங்களும், சார்பு நிலைகளும் பெரிதும் வேறுபட்டுள்ளன.

ஆகவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இதில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பு மக்களினதும் நல்ல நண்பனாக இருந்து, ஒரு சுமுக நிலையைத் தோற்றுவிக்க உதவுவது குறித்து இந்தியா சிந்திக்கவேண்டும்.

மிகக் குறிப்பாக தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி இது விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

மத்தியில் ஆட்சி நடத்தும் ஐக்கிய முன்னணி அரசில் கருணாநிதியின் தி.மு. கட்சி ஓர் அங்கம். முன்னணியின் செயலூக்கக் குழுவில் (Steering Committe) கருணாநிதி மிகப் பிரதான உறுப்பினர். மத்திய அரசில் இம்முறைதான் தென் மாநிலத்தவர்களின் கை ஓங்கியுள்ளது.

எனவே ஈழத் தமிழருக்குத் தமிழகம் இப்போது உதவவில்லை என்றால், இனி எப்போதுமே உதவச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது சந்தேகமே.

அதனால், போரினால் ஈழத்தமிழர்கள் இறப்பதையும், அகதிகளாக அவஸ்தைப் படுவதையும் தடுக்கக்கூடிய ஒரு சுமுக நிலையைத் தோற்றுவிக்க மத்திய அரசு உதவுவதற்கு, முதல்வர் கருணாநிதி தூண்டுதலாக இருக்க வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

# வடபகுதியிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்கள் பாக்கியசாலிகளாம்

## அஸ்ரப் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 22

வடபகுதியில் இருந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தீவிரவாதிகளால் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் பாக்கியசாலிகள் என்றே கருதவேண்டி உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தளம் தொகுதியில் உள்ள பாலாவி என்ற இடத்தில் 26 ஆவது மீள் குடியேற்ற கிராமமான எருக்கலம்பிட்டி கிராமத்தை அமைச்சர் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

வடபகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்காக அமைக்கப்பட்ட இந்தக் குடியேற்றக் கிராமத்தில் நான்கு பாடசாலைகள், ஓர் உப தபால் நிலையம், கிராம அதிகாரி அலுவலகம், நூல் நிலையம், விளையாட்டு மைதானம், மின்விநியோகம் ஆகியவை அடங்கி உள்ளன.

முஸ்லிம்கள் வடக்கில் இருந்து விரட்டப்படாதிருந்தால் தற்பொழுது இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்கவேண்டி இருந்திருக்கும். இதன் காரணமாக அதிக உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும். அங்கும் இங்கும் அலைந்து திரிய வேண்டிய நிலையும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

வடக்கின் இருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தான் காரணம் என்று சில தீயசக்திகள் இன்னமும்சொல்லித் திரிகின்றன.

யுத்தத்தின் மத்தியில் அரசியல் ஆதாயம் தேடுவதே இவர்களின் நோக்கம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ)

## ஆய்வு கூடங்களுக்கான இரசாயனப் பொருள்கள்

### யாழ். எடுத்து வரப்படும்

யாழ் மாவட்ட பாடசாலைகளில் உள்ள விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களை அவசரமாக அனுப்பி வைக்க வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா மாகாண ஆளுநர் ஊடாக அரசிடம் கோரியுள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக வடபகுதிப் பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களை மத்திய கல்வி அமைச்சு அனுப்பாதிருந்து வந்தது. (இ-3)

## வவுனியா, திருமலையில் கணணி பயிற்சி நிலையங்கள்

### யாழ். இளைஞர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 22

தேசிய தொழில் பயிற்சி அதிகாரசபையின் ஆதரவில் வவுனியாவிலும் திருகோணமலையிலும் கணணிப் பயிற்சி நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

இந்த இரண்டு நிலையங்களும் அடுத்த மாதத்தில் இயங்கத் தொடங்கும் என்று அதிகாரசபையின் வடக்கு - கிழக்கு பயிற்சி முகாமையாளர் ம. சிவயோகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, திருகோணமலை கணணி பயிற்சி நிலையங்களுக்கு யாழ். மாவட்டத்திலிருந்தும் இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

ஜி. சீ. ஈ சாதாரண தர பரீட்சையில் கணிதம் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்தோர் இப்பயிற்சி நெறிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலமே பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி இம் மாதம் 25 ஆம் திகதியாகும்.

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பங்கள் சில தினங்கள் பிந்திக் கிடைத்தாலும் அவர்கள் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்று வடக்கு - கிழக்கு பயிற்சி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்தப்பயிற்சி நெறி பற்றிய விவரங்களை உதயன் பணிமனையிலும், பிரதம தபாலக அறிவித்தல் பலகையிலும் பார்வையிடலாம். (அ)

## வெளிநாட்டு ராஜதந்திரிகள் வவுனியா வருகின்றனர்

கொழும்பு, ஒக் 22

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்த உயர்அதிகாரிகள் இவ் வாரம் வவுனியாவுக்கு வருகை தரவுள்ளனர்.

இந்த அதிகாரிகள் வவுனியாவின் பொது வசதிகளை நேரில் கண்டறிவதோடு குறிப்பாக இடம் பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ளவர்களைச் சந்திப்பார்கள்.

அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நேற்று வவுனியா வர இருந்தனர்.

உலக தரிசன நிறுவனத்துக்கு உதவி வழங்கும் ஆஸ்திரேலியத் தூதரக அதிகாரிகள் இன்று வருகை தர உள்ளனர்.

கனேடிய உயர் ஸ்தானிகரும் அவரது குழுவினரும் 24 ஆம் திகதி வவுனியா வருவார்கள். (இ-3)

## 559 பேர் கப்பல்களில் புறப்பாடு

நேற்றுமுன்தினம் நரோமா, தாரகி, எண்டூஸ்ரன் கப்பல்களில் 498 பயணிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

559 பேர் நேற்று அக்கப்பல்களில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

## தென். கிழக்கு பல்கலை. மாணவர்கள் பகிஷ்கரிப்பு!

### காலவரையறையின்றி மூட முடிவு

தென். கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் சம்மாந்துறை இணைந்த பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களை இணைக்கக் கூடாது என்று கோரி தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்ற அதேவேளை —

பல்கலைக்கழகத்தை காலவரையறையின்றி மறு அறிவித்தல் வரை மூட பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் உடனடியாக விடுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் என்றும்—

பல்கலைக்கழக வளவுக்குள் வரக்கூடாது என்றும்— பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார், (-3)

## கட்டாக்காலி மாடுகள் 3தினங்களின்பின் ஏலத்தில்

கட்டாக்காலி மாடுகள் பிடித்து வைக்கப்பட்டு மூன்று தினங்களுக்குப் பின்னர் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி தென். மேற்கு பகுதிகளில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் இருவர் கட்டாக்காலி மாடுகளை பிடிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு மாடு பிடிப்பதற்கு 125 ரூபா பணம் வழங்கப்படுகின்றது. பிடிக்கப்பட்ட மாடுகளை பராமரிப்பதற்கு மாடு ஒன்றுக்கு தினம் 25 ரூபா பணம் வழங்கப்படுகின்றது.

பயிர்களை அழிவிலிருந்து காப்பாற்றவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவாலி வடக்கில் மட்டும் 18 கட்டாக்காலி மாடுகள் நடமாடித் திரிவதாகத் தெரிவிக்கப்பட்டது (இ-145)

## அரைகுறையாக எரிந்த சடலம்; மர்மம் நீடிப்பு!

வலி தென் மேற்கு, ஒக். 22

நவாலி ஆரியம்பிட்டி மயானத்தில் முழுமையாக எரிக்கப்படாத நிலையில் கண்டெடுக்கப்பட்ட சடலம் குறித்த மர்மம் நீடிக்கின்றது.

கடந்த 16 ஆம் திகதி காலை அயலவர்களினால் இச்சடலம் கண்டெடுக்கப்பட்டு புதைக்கப்பட்டது.

முதல் நாள் இரவு இச்சடலத்துக்கு தீ மூட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

முதல் நாள் இரவு விறகுகளுடன் மாட்டுவண்டி ஒன்று அப்பகுதியில் சென்றதாகவும் அதில் மேற்படி சடலமும் மறைத்துக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்றும் ஊர் மக்கள் கருதுகின்றனர்.

அடுத்தநாள், பாதி எரிந்த நிலையில் காணப்பட்ட இச்சடலத்தை அயலவர்கள் அந்த இடத்திலேயே தோண்டிப் புதைத்தனர்.

முழுமையாக எரிக்கப்படாத நிலையில் கண்டெடுக்கப்பட்ட இச்சடலம் ஆணினுடையது என்றும்—

பிரேதப் பெட்டி இல்லாமல் இது எரிக்கப்பட்டிருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-145)

### நாளை

ஐப்பசி 7
புதன்கிழமை
திதி: துவாதசி
பின்னிரவு 12.47 வரை.
நட்சத்திரம்: சதயம்
காலை 6.51 வரை
பூரட்டாதி
வியாழன் காலை
5 29 வரை
ராகுகாலம்: 12.02-1.32
சுபநேரம்: 4.32-6.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## வீட்டுக்கு வீடு கசிப்பு

யாழ். நகரப் பகுதிகளில் தெருவுக்கு தெரு, மூலைக்கு மூலை மதுபானம் விற்கப்படுவதாக ''வாசகர் திருமுகம்'' பகுதியில் ஓர் அன்பர் கவலை தெரிவித்திருந்தார்.

அதேபோல, வடமராட்சியிலும் பல பகுதிகளில் வீட்டுக்கு வீடு கசிப்பு விற்பனை நடைபெறுகின்றது!

யாழ்ப்பாண மக்கள் தமது உறவை இழந்து, உடைமைகளை இழந்து வாழ வழியின்றித் தவித்துக் கொண்டிருக்கும் இக் கால கட்டத்தில், மது, கசிப்பு ஆகியவை மூலமும் ஓர் அழிவு தேவையா?

குடி குடியைக் கெடுக்கும் என்ற முதுமொழிக்கிணங்க கசிப்பு அருந்துவோர் வாலிபர் தொடக்கம் முதியோர்வரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மிக அவஸ்தைப்படுவதை, நோய்வாய்ப்பட்டு பல இன்னல்களை அனுபவிப்பதை நான் கண்ணாரக் கண்டுள்ளேன்.

மனித உயிர்க் கொல்லியான கசிப்பை உற்பத்தி செய்து தான் ஜீவனோபாயத்தை நடத்த வேண்டுமா? கசிப்பை உற்பத்தி செய்பவர்கள் தமது மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்க வேண்டும்.

வாசகர் திருமுகம்

கசிப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபடுபவர்களைத் தடுப்பதற்கும், மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் தென்னை பனை வள அபிவிருத்திச் சபையினரும், மது வரித் திணைக்களத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவர்கள் இதில் அக்கறை காட்டுவார்களா?

கா. அருந்தவராசா.
தொண்டமனாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுவாஞ்சிக்குடியில் பொது மக்களை படை முகாமுக்கு அழைத்துக் கூட்டம்

கொழும்பு, ஒக். 22

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை அதிகாரி கடந்த ஞாயிறு காலை தனது முகாமுக்குப் பொது மக்களை அழைத்துக் கூட்டம் நடத்தினார்.

இந்தக் கூட்டத்துக்கான அறிவிப்பு சனிக்கிழமை மாலை படையினரால் ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப் பட்டது.

பெரிய கல்லாறு, கோட்டக் கல்லாறு, களுதாவளை, களுவாஞ்சிக் குடி, ஒந்தாச்சி மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் சுமார் 10ஆயிரம் மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடைச்சொந்தக்காரர்களும் கூட்டத்துக்கு அழைக்கப் பட்டிருந்ததால் கடைகள் மூடப் பட்டுக்கிடந்தன.

அங்கு பேசிய அதிரடிப் படை அதிகாரி, 'தனிநாட்டுக் கோரிக்கையை, முன் வைத்துப் போராடும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களைப் பிழையான பாதையில் இட்டுச் செல்கின்றனர். பொது மக்களைப் பாதிக்கும் செயலில் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்றார்.

இப்பொழுது அவர்கள் மின் சாரத்தைத் துண்டித்துள்ளனர். இத்தகைய நடவடிக்கைகளினால் பாதிக்கப் பட்டவர்கள் பொது மக்களே. பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சமாதான வழியில் போராட்டத்தை நடத்தும் படி நீங்கள் அவர்களிடம் முறையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதே வேளை — புதுக்குடியிருப்பு கண்ணகை அம்மன் ஆலயத்துக்கும் அப்பகுதி மக்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இங்கு குழுமியிருந்தோரை படையினர் வீடியோ படம் எடுத்தனர். (இ-3)

## விளையாட்டரங்கு

# வெற்றி தோல்வி இன்றி சிம்பாப்பே - பாக். ஆட்டம்

பாகிஸ்தான் — சிம்பாப்பே நாடுகளுக்கிடையே ஷேக்ஹபுரா நகரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி யின்றி முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணிவீரர் வாஷிம் அஹ்ரம் 12 சிக்சர்களை அடித்து புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

முன்னர் இங்கிலாந்து அணிவீரர் ஹமேட்ன் 1932-33 இல் நியூசிலாந்திற்கு எதிராக ஆடிய போது எடுத்த 336 ஓட்டங்களில் 10 சிக்சர்களை அடித்திருந்தார்.

வாஷிம் அஹ்ரமும் முஸ்ராக்கும் இணைந்து 8 விக்கெட் இணையாக 313 ஓட்டங்களை எடுத்ததும் ஒரு புதிய சாதனையாகும்.

ஸ்கோர் விவரம்: பாகிஸ்தான்—541 ஓட்டங்க

சிம்பாப்பே—முதல் இனிங்ஸ் 375 இரண்டாம் இனிங்ஸ் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 241 ஓட்டங்கள். (இ-ரி-10)

# பெங்களூரில் இந்தியா வெற்றி

பெங்களூர், ஒக். 22

நேற்று இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கு மிடையே பெங்களூரில் நடைபெற்ற ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில இந்தியா ஆஸ்திரேலியாவை தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 7 விக்கெட் இழப்பிற்கு 215 ஓட்டங்களை எடுத்தது. கப்டன் மாக் ரெயிலர் 105 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலளித்து ஆடிய இந்தியா முதல் 4 விக்கெட்டுக்களை 49 ஓட்டங்களுக்கு இழந்தது. பின்னர் 164 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 8 ஆவது விக்கெட்டை இழந்தது. இருப்பினும் சிறிநாத்தும் கும்பிளேயும் இணைந்து இணைபிரியாது இந்தியாவுக்கு வெற்றியைத் தேடித் தந்தனர். முன்னதாக டெண்டுல்கார் 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். (இ-10)

## கிரனேட் வீச்சை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே நேரம் படை வீரர் ஒருவரும் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்—மேலதிக சிகிச்சைக்காக அவர் பின்னர் வேறிடத்துக்குக் கொண்டு செல்லப் பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின் போது ஒரு படை வீரர் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் அது ஊர்ஜிதம் செய்யப்பட வில்லை. (இ-15-173)

## மகஸீன்,...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை மூன்று மாதங்களின் பின்னரே அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர்.

அப்போது அவர்களை (மேலும்) மூன்று மாதங்களுக்குத் தடுத்து வைத்திருக்குமாறு உத்தரவிடப்பட்டது.

மீண்டும் இம்மாத முற்பகுதியில் அவர்கள் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அப்போது எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைத்திருந்து, மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தம்மீது குற்றச்சாட்டு எதனையும் சுமத்தாது— வழக்குத் தொடராமல்— தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்திருப்பது நியாயமற்றது என்று கூறி, அந்த உத்தரவை ஆட்சேபித்தே நேற்று 76 இளைஞர்களும் உண்ணாவிரதத்தில் குதித்தனர்.

இவர்கள் யாவரும் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் என்று கூறப்பட்டே கைது செய்யப்பட்டனர்

இதே வேளை —

ஜனவரி 10 ஆம் திகதி வரை இந்த இளைஞர்களைத் தடுத்து வைக்குமாறு நீதிமன்றமே உத்தரவிட்டதால், இது விடயத்தில், தாம் எதுவுமே செய்ய முடியாது என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## சமய சந்திகளில்

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள வாரிவனேஸ்வரம் புராதன தான்தோன்றீஸ்வரர் ஆலய கேதாரகௌரி விழா நேற்று ஆரம்பமாகியது. எதிர்வரும் 11 ஆம் திகதி தீபாவளித் தினம் வரை நாளாந்தம் காலை 9 மணி முதல் 12 மணி வரை உற்சவம் நடைபெறும். (அ-4)

★ ★ ★

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மகா சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ)

# படையினருக்கு உதவும் கைநூல்

கொழும்பு ஒக். 22

யாழ். குடாநாட்டில் வீதிச் சோதனைகளில் ஈடுபடும் பாதுகாப்புப் படையினர் பொது மக்களுடன் தமிழில் உரையாட உதவுவதற்காக வடமாகாண புனரமைப்பு அதிகாரசபை சிங்கள கைநூல் ஒன்றை அச்சிட்டு பாதுகாப்பு படையினருக்கு வழங்கியுள்ளது.

தமிழ் சொற்கள் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ள இந்தக் கைநூல்கள், தமிழ்மொழி தெரியாத படையினர் பொது மக்களுடன் உரையாடுவதில் உள்ள அசௌகரியங்களை நீக்குவதற்கு உதவும் என்று மாகாண புனரமைப்பு அதிகாரசபைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-3)

# ஆந்திராவில் வெள்ளம்; 260 பேர் இறந்தனர்

ஹைதராபாத், ஒக். 22

தென் இந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நேற்று வரை 260 பேர் இறந்துள்ளனர். நூற்றுக் கணக்கான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் இறந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஆயிரக்கணக்கான விளை நிலங்கள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன.

நேற்று மழை தணிந்திருந்ததையடுத்து மீட்புப்பணி முழு வீச்சுடன் ஆரம்பமானது. விமானங்களில் இருந்து உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன. (இ-3)


தமிழ் - ஆங்கில தட்டச்சு

மற்றும்

றோனியோ வேலைகளுக்கு

அருண்

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.


## 9 படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு, வெற்றிலைக் கேணி முதல் முல்லைத்தீவு வரை கடற்கரையோரமாக உள்ள கடற்புலிகளின் தளம் அழிக்கும் கடற்படையினரின் நடவடிக்கையின்போதே இந்த மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## அகதிகள் சென்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்டம் முழங்காவிலில் இருந்து படகொன்றில் இந்தியா நோக்கிப் பயணத்தை மேற்கொண்ட சமயமே இத் துப்பாக்கிப்பிரயோகச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படகினைத் தடுத்து நிறுத்துவதற்காக கடற்படையினரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் —

படகு காயமடைந்தவருடன், ஊர்காவற்றுறைக் கரைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் —

காயமடைந்தவர் உடன் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் —

மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டபோதே இடையில் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கையில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் உயிரிழந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று நடைபெற்ற மரண விசாரணையை அடுத்து சடலம் கணவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் படகில் இருந்த ஏனையோர் ஊர்காவற்றுறையில் ஈ. பி. டி. பி. யின் பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-15-167)


கலைமகள் கல்வி நிலையம்

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான G.A.Q. B.A. வகுப்புகள் எமது வழமையான ஆசிரியர் குழுவினால் 1 - 11 - 96 இல் ஆரம்பமாகவுள்ளன. அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி

ரோலை அம்மன் கோயிலடி,

மீசாலை.

(C/3321)


## பிரபாவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காட்டியுள்ளனர் என்றும் —

இந்தச் சந்தேகநபர்கள் வழங்கிய தகவல்களின் படி தெகிவளை ரயில் நிலையக் குண்டு வெடிப்பைப் பிரபாகரன் தான் வழிநடத்தினார் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் — பொலீஸ் வட்டாரங்கள் கூறுவதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்தது. (இ-3)


# OBITUARY

## Mrs. INPAMANY MATHIAPARANAM

(Retd. Teacher of Jaffna Central College)

Beloved wife of Late A. Mathiaparanam (Retd. Teacher of Jaffna Central College), Beloved mother of Dr. (Mrs.) Vino Sathiananthan and Vivekananthan (Engineer), Daughter of Late Mr. & Mrs. Arumai-nayagam, sister of Late Thurairatnam, Manonmany, Ponmany, Dr. Arumainayagam, Late Dr. Selvaratnam, Late Jeyaratnam, Late Rajaratnam, Dr. Jeevaratnam, Dr. Wijeyaratnam and Atputhamany, entered Glory on 18-10-1996 in Australia.

The Funeral took place on 20-10-1996.

Mrs. Atputhy Kirubairajah
Somasuntharam Avenue,
Chundikuli.

(C/3322)


## கடற் புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது குறைந்தது 40 புலிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் அல்லது காயமடைந்திருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது

புன்னைத்தொடுவாயில் உள்ள இந்தக் கடற்புலிகளின் தளத்தை இராணுவ - கடற்படை விசேட அணியினர் நேற்றுக் காலை 8-20 மணியளவில் கைப்பற்றினர் என்றும் —

புலிகள் ஆரம்பத்தில் எதிர்ப்புக் காட்டினரெனினும் பின்னர் தளத்தைக் கைவிட்டுச் சென்றனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந் நடவடிக்கையின் போது கடற்படை படகு ஒன்றும், எம். ஐ. 17 ரக ஹெலிக்கொப்டரும் சேதமடைந்தன.

2 அதிகாரிகள் உட்பட ஐந்து கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

10 கடற்படையினரும், 5 இராணுவத்தினரும் காயமடைந்தார்கள்.

கொல்லப்பட்ட புலிகளில் மூன்று சிரேஷ்ட அங்கத்தவர்களும் அடங்கியிருந்தார்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

## நேற்றுக் காலை நடந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று வெளிநாட்டுச் சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் கிழக்கு மாகாணம் வந்தாறுமூலையில் படையினர் மறைந்திருந்து. தாக்கியதால் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-3-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393 இல் உள்ள அச்சகத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org